விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 2 வைகாசி 12 றம்ழான் 27 இதழ் 96

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26-5-1987

## குருநகரில் கடற்படை 'பீரங்கி'த் தாக்குதல்!

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5பேர் பலி!!

யாழ்ப்பாணம், செவ்வாய்

மண்டைதீவுக்கடலில் கடற்படைப் படகிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் குருநகரிலுள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உடல் சிதறிய நிலையில் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் 5 வயதுச் சிறுமியாவார்.

(-5ம் பக்கம் பார்க்க)

### வான்வெளியில் 6 பொம்மர்கள் தாக்குதல் 'வியூகம்'

# சுதுமலை பகுதியில் குண்டுவீச்சு

# பெண் உட்பட ஆறுபேர் பலி!

(நமது நிருபர் என். கே. துரைசிங்கம்)

யாழ். குடாநாட்டின் பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலங்களில் ஒன்றான சுதுமலை அம்மன்கோயில் மகோற்சவ கொடியேற்றம் ஆரம்பமாவதற்கு ஒருசில நிமிடங்கள் இருக்கையில், இந்த ஆலயச் சுற்றுடலில் பொம்மர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் ஆறுபேர் கொல்லப்பட்டனர் சுமார் 25 பேர் வரை காயமடைந்தனர். நேற்று நண்பகல்வேளை இக்கோரச்சம்பவம் இடம் பெற்றது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் ஆகாய வெளியில் வடக்குப் புறமாகவிருந்து ஆறு பொம்மர் விமானங்கள் திடீரென வெளிப்பட்டு வந்தன.

யுத்தகாலக்காட்சிகளைக் கண்முன்கொண்டு வருவதுபோல ஆறு பொம்மர்களில் ஒன்று முன்னேவர அதனைத் தொடர்ந்து ஏனைய ஐந்து பொம்மர்களும் அருகருகே வியூகம் அமைத்துவந்தன.

தொடர்ந்து இவை நடுவானில் நாலாபுறமும் பிரிந்து சென்று தாழ்வாகவும், சரிவாகவும் வேகத்தைக் கூட்டிச் சில நிமிடநேரம் ஆகாயத்தில் பலத்த இரைச்சலுடன் கரணங்களைப் போட்டவண்ணமிருந்தன.

தொடர்ந்து இவ்விமானங்களில் நான்கு சுதுமலை மானிப்பாய் பகுதியை நோக்கித் தாழ்வாகச் சென்று தமது தாக்குதல்களை ஆரம்பித்தன. இவ்வேளை ஹெலிகாப்டர் ஒன்றும் இப்பகுதியல் இவ் விமா

(5-ம் பக்கம் பார்க்க)

## நுணாவிலிலும் குண்டுவீச்சு ஒருவர் பலி, 5 பேர் காயம்!

யாழ்ப்பாணம், செவ்

சாவகச்சேரியிலும் [நுணாவில் கிழக்குப் பகுதியில்] நேற்று மாலை இடம்பெற்ற பொம்மர் ஹெலி தாக்குதலின் போது ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். ஐந்து பேருக்கும்மேல் படுகாயமடைந்துள்ளனர்.

இறந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்களும் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த நாகராசா [.5 வயது]என்பவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [கு]

### முன்னாள் காவலூர் எம். பி.

## பண்டிதர் இரத்தினம் இல்லம்மீதும் குண்டுவீச்சு!

### இரு குதிரைகள் பலி!

[வேலணை நிருபர்]

வேலணையில் பொம்மர்விமானக் குண்டுவீச்சில் முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணி ஊர்காவற்றுறை பாராளுமன்றஉறுப்பினர் பண்டிதர் க. பொ. இரத்தினத்தின் இல்லம் சேதமடைந்துள்ளது.

நேற்றுமாலை ஐந்துமணியளவில் தீவுப்பகுதியை நோக்கி 4 பொம்மர்விமானங்கள் வந்தன. இவற்றில் இரண்டு வேலணையில் பண்டிதர் இல்லம்மீது குண்டுவீச்சை மேற்கொண்டன.

[5-ம் பக்கம் பார்க்க]

### மட்டு.மண்முனையில்ஆகாயத்தாக்குதல்

## 10 சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், செவ்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனை, பளை, இபக்கச்சி ஆகிய இடங்களிலும் நேற்று இலங்கை விமானப் படையினரால் பொம்மர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக இந்திய வா[illegible]லிச் செய்திகள் [illegible]தெரிவிக்கின்றன.

மண்முனையில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலின் பின்னர் அங்கிருந்து 10 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள் மேலும் சிலர் கொல்லப்பட்டிருக்கலாமென்றும், பலர் காயமடைந்திருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. [illegible]

## உணவு முத்திரை தட்டுப்பாடு: 5,70,000 மக்கள் பாதிப்படையும் நிலை

[சுண்டுக்குளி]

வறுமை நிவாரணத் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் உணவுமுத்திரை பெறும் சுமார் 570,000 மக்கள் பாதிக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேற்படி திட்டத்தின்கீழ் 300 ரூபாவுக்கும் 700 ரூபாவுக்கும் இடைப்பட்ட வருமானம் பெறுபவர்களுக்கு அரசாங்கம் உணவுமுத்திரைகளை வழங்கி வந்தது.

இவ் உணவுமுத்திரைகள் கடந்தவருடம் ஜூன் மாதத்திலிருந்து இவ்வருட மே மாதம் வரையுள்ள ஒருவருட காலத்திற்கு வழங்கப்பட்டு தற்போது முடிவடைந்துள்ளது.

ஆனால் எதிர்வரும் யூன் மாதத்திலிருந்து பாவனைக்கு வரவேண்டிய உணவுமுத்திரைகள் கொழும்பிலிருந்து இன்னும் யாழ். சமூகசேவைப் பகுதிக்கு வந்துசேரவில்லை

(5-ம் பக்கம் பார்க்க)

## 'சேர்' குண்டு போடட்டுமா?

(யாழ்ப்பாணம்)

நேற்று சுதுமலைப்பகுதியில் 'பொம்மர்' விமானங்கள் குண்டு வீச்சில் ஈடுபட்டிருந்த சமயம் வானொலியில் எஃப் எம். மீட்டரில் இடையிடையே கேட்க முடிந்த சம்பாஷணைகளில் சில வருமாறு:

"கே. கே. எஸ். வீதியின் கரையில் அந்தப் பெரிய வீட்டுக்கு போடு"

"அங்கே ஒருகடை தெரிகிறது"

"அந்தக் கடைக்குப் பின்னுலுள்ள வீட்டுக்குப் போடு"

"அந்தப் பெரிய வீடு, வீதியின் அருகில் ஒருபெரிய மரத்துக்கு அருகில் சிவப்பு நிறத்தில் சதுரமான கூரையுள்ள வீட்டுக்குப்போடு". (5-ம் பக்கம் பார்க்க)



சுதுமலையில் விமானக் குண்டுவீச்சினால் கொல்லப்பட்ட ஆறுபேரில் மூவரின் சடலங்கள். [படம்: தேவா]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சொந்த பாவிப்பில் உள்ள 7 ஸ்ரீ 9471 மொறிஸ் ஒக்ஸ் போட் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: சு. சின்னத்துரை, 93, மானிப்பாய்றோட், யாழ்ப்பாணம். சி–9256

ஆசிரியர் தேர்வுப் பரீட்சைக்குரிய 'பொது அறிவு', 'பொது உளச்சார்பு' நூல்கள் விற்பனையாகின்றன. விலை: 25/-. க. குணராசா (எம். ஏ.) ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபால சிங்கம் புத்தகசாலைகளில் கிடைக்கும். [சி-9179]

4 சிறி வோக்ஸ்வகன் கார் 94 சிறி சி. 90. வீட்டுத் தளபாடங்கள் பிறிஜ். ரி. வி. எவர் சில்வர் சாமான்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க, 181, பலாலி வீதி, கோண்டாவில். (சி 9270)

எம்மிடம் அழகுசாதன அன்பளிப்பு பொருட்களும் மற்றும் திருமண, பரதநாட்டிய சோடினைப்பொருட்கள், அத்துடன் கோல்ட் கவறிங் நகைகள் விற்பனைக்குண்டு. ஜெயா பென்சி ஹவுஸ், கிளை: 788, பருத்தித்துறை றோட், முத்திரைச்சந்தி, நல்லூர். சி-9224

திருமண அழைப்பிதழ்களும் திருமண வாழ்த்துமடல்களும், திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து மடல்களும், பிறந்த நாள் வாழ்த்து மடல்களும், சகல விலைகளிலுமான முத்திரைவகைகளும், வான் கடித உறைகளும் மொத்தமாகவும் [illegible]யாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. (சி 9146)

யூலை மாதம் நடைபெறவிருக்கும் 6ம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சைகுரிய பயிற்சி நூல். கணிதம்- தமிழ் இரண்டையும் உள்ளடக்கிய 15 பயிற்சிகள். விலை ரூபா 16/90. பூபாலசிங்கம், சிறீலங்கா, ஸ்ரீ சுப்பிரமணியம் ஆகிய புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு அஸ்ரன் பதிப்பகம், 166/1 ஆஸ்பத்திரி வீதி- யாழ்ப்பாணம். (சி 8877)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 71 ஸ்ரீ 0273 லாண்ட் மாஸ்டர் பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. செல்லையா, 123/1, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். (சி 9255)

உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி, "பொது அறிவும் பொது உளச்சார்பும்" விலை ரூபா 49/50. 1984, 87ல் நடைபெற்ற பரீட்சை வினு - விடைப் பயிற்சிகளையும் உள்ளடக்கியது. பூபாலசிங்கம், சிறீலங்கா, ஸ்ரீ சுப்பிரமணியம் ஆகிய புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப்பெற அஸ்ரன் பதிப்பகம், 166/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 8878)

தற்போதைய நடைமுறை விடயங்களை உள்ளடக்கிய பொது அறிவு வினு விடைக் களஞ்சியம் ஆசிரியர் தேர்வுப் பரீட்சைக்கு அத்தியாவசியமாகப் படிக்க வேண்டிய ஒரே நூல். ஆக்கியோன் தணிகாசலம் சச்சிவேல். விலை 19/50. விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, சுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி 9276)

## தேவை

இறைச்சிக் கோழிகள் [Broiler] தேவை. இருப்பவர் க[illegible]தொடர்பு கொள்ளவும்: அண்ணு பாம், இணுவில். எ-021

நல்ல நிலையிலுள்ள கல் உடைக்கும் இயந்திரம் கிறேஸர் [Crusher] தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்க. விளம்பர இல. சி-9249, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-9249

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி சுற்றுடலில் நல்ல தண்ணீர் வசதியோடு ஒரு வீடு தேவை. 23,கச்சேரி நல்லூர் றோட் (சுண்டிக்குளி தபால் கந்தோருக்கு அருகாமையில்), யாழ்ப்பாணம். (சி 9279)

உ

# திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான பிரபவ ஆண்டு வைகாசி மாதம் 15ம் நாள் 29-05 1987 வெள்ளிக்கிழமை காலை 9-28 தொடக்கம் 10-16 வரை உள்ளசுபநேரத்தில்,

| மணமகன்: | மணமகள் |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| சுப்பிரமணிய ஐயர் | சோமாஸ்கந்தக் குருக்கள் |
| **சேஷாமணிக்கும்** | **உஷாவிற்கும்** |
| (மருத்துவபீடம், இறுதியாண்டு யாழ். பல்கலைக்கழகம்) | |

திருமணம் கந்தர்மடம் பழம்றோட் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் திருமணத்திற்கு சுற்றத்தவர்களையும், நண்பர்களையும், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சமாவர்த்தனம்:- காலை 6—7 மணிவரை. (மேற்படி மண்டபத்தில்)

இங்ஙனம்

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு. திருமதி |
| சேஷா ஐயர் | பரமேஸ்வரக் குருக்கள் |
| சுப்பிரமணிய ஐயர் | சோமாஸ்கந்தக் குருக்கள் |
| (மெட்ருஸ் மணிஐயர்) | பழம் றோட், கந்தர்மடம். |
| 78/10, மாரி லேன், | யாழ்ப்பாணம். |
| வத்துகாமம். | (சி-9280) |

## வகுப்புக்கள்

Spoken English புதிய பிரிவு ஆரம்பம் 1-6-87 திங்கள்.புதன், வெள்ளி. நேரம் காலை 6-7 மணி S B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (சி 9278)

Toefl புதியபிரிவு சனி,ஞாயிறு காலை 6 மணி -8 மணி. ஆரம்பம் 30-5-87. S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (சி 9277)

Radio T.V, Air Conditioning, Refrigeration வயறிங் வெல்டிங், பிளம்பிங், மோட்டார் மெக்கானிசம், வைண்டிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகின்றன. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering Aid Hall(ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில்), 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 9273)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**திருமதி மாமாங்கம் கதிரவேல்பிள்ளை (நாகம்மா)**

மண்ணுலகில்: 16-01-1910

விண்ணுலகம்: 27-04-1987

திதி: 27-05-1987

எமது அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியைகளில் பங்களித்து தமது அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரது நினைவுகள் என்றும் எம் மனதைவிட்டகலா. அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!


நாளை (27-05-87) புதன் கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டி வைபவத்தில் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலை 8-30: அந்தியேட்டி கிரியைகள், 10-30: 'மாமாங்க மலர்' சமர்ப்பணம், 11-15: ஆத்மசாந்தி வழிபாடு. நண்பகல்; 12-00 மகேஸ்வர பூசை.

க. சிவபாலசுந்தரம்,
வெ. சகுந்தலாதேவி,
க. சிவானந்தம்,
க. விநாயகமூர்த்தி.

'தேவி அகம்'
(ப. நோ. கூ. ச. கிளை 5 முன்பாக)
பன்னாலை,
தெல்லிப்பழை. (ஏ 024)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் கந்தசாமி இளங்கோ**

பிறப்பு: 21-05-1967

இறப்பு: 26-05-1984

நாட்டை மொழியை நம்மினத்தை நல்லோரென்றும் பேணியதை மீட்டல் செய்தே உளத்தினிலே மீண்டும் உரிமை தனைப் பெற்றிடவே, ஊட்டி உணர்வை எல்லோர்க்கும் உறங்காதென்றும் உழைத்திட்டாய், வாட்டிடும் இன்னல் வந்த போதும் விடுதலைதான் உயிரென்று வாழ்ந்தனையே.

உன்ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பெற்றோர், சகோதரர், சகோதரிகள், மைத்துனர், உறவினர்.

பொன்னந்தோட்டம், துன்னாலை தெற்கு, கரவெட்டி. (சி 9093)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி செல்லம் இராஜநாயகம்**

அன்னையின் மடியில்: 20-12-1910

ஆண்டவன் அடியில்: 26-05-1986

பத்துமாதம் சுமந்து பெற்ற உன்னைப் பறிகொடுத்தே ஓராண்டுஆயிற்றம்மா, எத்திசையும் புகழ்பெறவே எம்மைவிட்டீர் ஏழைகளாயுமைப் பிரிந்து துடிக்கின்றோமே நித்திரையிலெம்ம[illegible]கில் வந்து நிற்பாய், நிசமாக வருவாயென் றேங்குகின்றோம், புத்திமதி பல எமக்குக் கூறிச் சென்றீர் பூப்போட்டு உன்னடியைச் சேவிக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

திருமதி
பா. இராஜேந்திரசிங்கம் (அதிபர்)
'ஜெப இல்லம்'
உடுப்பிட்டி. (சி 9187)

## பயிற்சி பயனளிக்கும்

மீசாலை, திங்கள்.

"விளையாட்டு மேடையில் மாணவர்கள் பயிலும் பயிற்சிகள் அவர்களை சமூகத்திலும் உயர்ந்த பண்பு, கட்டுப்பாடு தலைமைத்துவம் உடையவர்களாக செயலாற்ற வழிவகுக்கும்".

வரணிப் பகுதியைச் சேர்ந்த டமியன் அ. த. க பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய முன்னாள் அதிபர் க. வேலுப்பிள்ளை இவ்வாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திருமதி மகேஸ்வரி வீரகத்தி தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

## விற்பனைக்கு

எமது சொந்தப் பாவனையிலுள்ள 'ஸ்சுசூ' யேணி 1981 மொடல் 26 இருக்கைகளைக் கொண்டது. கேள்வி விண்ணப்ப மூலம் விற்பனைக்கு உண்டு. விண்ணப்ப முடிவு திகதி 30-6 87. விபரங்களுக்கு அலுவலகத்தில்தொடர்பு கொள்க.

பொதுமுகாமையாளர்,
பூநகரி பலநோக்குக் கூ. சங்கம,
பூநகரி.
[சி 025]

## ஓராண்டு நினைவு அஞ்சலி



**அமரர் இராமசாமி சண்முகநாதன்**

(தபால் ஊழியர், கிளிநொச்சி)

ஆண்டவன் படைப்பு: 26-10-1953

ஆள்பவன் அழிப்பு: 06-06.1986

திதி; 26-05-1987

[இவர் கிளிநொச்சி திருநகரைப் பிறப்பிடமாகவும், ஊரெழுவை உறைவிடமாகவும் கொண்டவராவார்]

அகால மரணமடைந்து ஆண்டொன்று சென்றாலும் எங்கள் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் உங்களுக்கு ஆறாத காதலொடு அஞ்சலியு செலுத்துகிறோம்.

அன்பு மனைவி, மகன், பெற்றோர், மாமா, மாமி, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், உறவினர், நண்பர்கள், இ. சின்னத்துரை (சோதிடர்).

ஊரெழு மேற்கு, சுன்னாகம். (சி-9272)

### மணிவாக்கு

சாகப் போகிறவனுக்குப் பெயர் மனிதன்!
சாவை வரவேற்பவனுக்குப் பெயர் வீரன்!
சாவைக் கண்டு ஓடுபவனுக்குப் பெயர் கோழை!
—மிட்போர்

## நமது நோக்கு

# பூரி - கிழங்கு

ஆற்றல் மிக்கார் பெருந் தோல்விகளால் வீறெய்துவாரேயன்றி மலைவதில்லை.

யாழ்ப்பாணத்துப் பழங்குடி மக்கள் பழமும்தின்று கொட்டையுமிட்ட சமுதாயத்தினரென்பதால் மலை போல் வருவதை தலைமேற் சுமக்க வல்லவர்கள்.

தலைமேற் சுமந்து ஊர் ஊராகத் திரிந்து ஊதியம் தேடிய ஒரு தகப்பனார் பன்னிரண்டு குழந்தைகளைக் காப்பாற்றமுடிந்தது. ஆனால் இன்றைய நிலையில் ஒரு தகப்பனாரை பன்னிரண்டு பிள்ளைகள் காப்பாற்றமுடிவதில்லை.

காலமாற்றத்தில் பண்புகள் மாறினாலும் உரமான அத்திபாரம் இலகுவில் அசையாது வெளியுலகுடன் எவ்வித தொடர்புமின்றி சுமார் ஐந்து மாதங்கள் வாழும் யாழ்ப்பாண மக்கள் ஆற்றல் பெற்றவர்களென்பதை இன்று வெளி உலகம் அறியமுடிகிறது.

யாழ்ப்பாணத்தவர் கப்பலோட்டிய காலம் எங்களிற் பலருக்கு இன்று நினைவுக்கு வருகிறது. ஏன் சங்ககால இலக்கியத்தில் ஒன்றான பட்டினப் பாலை யாழ்ப்பாணம் உட்பட ஈழநாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்திறங்கிய "ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்" என்ற பண்டங்களைக் குறிப்பிடுகின்றது.

ஈழநாட்டிலிருந்து என்ன உணவுப் பொருள்கள் தமிழ் நாட்டுக்கு இறக்குமதியாகினஎன்று இப்போது தெளிவாகத்தெரியவில்லை. ஆயினும் பண்டமாற்று முறையில் சோழவளநாடு விரும்பியேற்றுக்கொண்ட உணவுப்பொருள்கள் இந்நாட்டிலிருந்து வந்தன என்பது ஒருபெருஞ் சிறப்பன்றோ?

கதைக்குள் கதையென்றவாறு, பட்டினப்பாலையை இன்று அக்காலத் தமிழில் படிப்பவர் சிலரினுஞ் சிலரே. ஆங்கிலம் பயின்ற அறிஞர்களுக்கு, அதன் ஆங்கில மொழிபெயர்ப்பை உதவியவர், முன்னைநாள் யாழ்ப்பாணக்கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் ஜே.வி. செல்லையா. மிகச்சிறந்த மொழிபெயர்ப்பென்பதால் தமிழ்நாடு அதனைப் பதிப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆழநீளமறியாத இன்றைய இலங்கை அரசு ஈழநாட்டில் [இலங்கை] வாழும் தமிழ் மக்கள் தாங்கள் வாழும் பகுதியை 'ஈழம்' என்று கொள்ள விரும்பியதை தமது அரச படையினரால் அடக்க முயல்கிறது.

இலங்கைத் தீவே ஒரு சிறிய நாடு.அதற்குள் இருக்கும் ஒரு குடாநாடு அரசுக்கு கொடுக்கும் தலையிடியைத் தாங்கமுடியாது குடாநாட்டை முற்றுகையிடவும் உலகிலிருந்து முற்றாகத் துண்டிக்கவும் முயல்கிறது.

இலங்கைவாழ் தமிழ் மக்கள் தங்கள் சிங்கள சகோதரர்களுடன் கொண்டுள்ள தொடர்பு தொன்றுதொட்டு மிக நெருக்கமாக விருந்தது.

நாம் குறிப்பிட்ட தமிழ்நாட்டின் தொடர்பு தொன்மையாக விருந்த போதும் பிரிட்டிஷ் ஆட்சியில் நாம் இந்நாட்டு மக்கள் என்பதும், சுதந்திர மக்களாக வாழ்வதற்கு தேசிய ஒற்றுமை தேவையென்பதும் நாடறிந்த உண்மை.

பெற்ற சுதந்திரம், உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன் என்ற வாசகத்துக்கமைய இனக்குரோதத்தையும்படுகொலையையும் உற்பத்திசெய்தது.

தான் ஆடத்தசை ஆடுமென்பதுஎன்றும் உண்மை; இதனை நிராகரிப்பதால் அது பொய்த்துவிடுவதில்லை. எமதுசகோதரருக்கு இந்தக்கதியாவென்று வீறுகொண்டு தமிழ்நாட்டு மக்கள் இன்று யாழ்ப்பாண மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கு இலங்கை அரசின் 'ஓகே' இன்றியமையாததா?

சட்டம் என்ன சொல்கிறது? (உயிர்) ஆபத்துக்கு பாபம் இல்லை என்பார்கள். இச்சிறு ஊரில் ஒரு பெரும் மக்கள் மாண்டுமடிவது எவ்வாறுமுடியும். இங்குள்ள பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தின் தளர்ச்சியும் வீழ்ச்சியும் என்ற மரண அறிவித்தலைப் பிரசுரிக்கும் நோக்கத்தைக் கொண்டு செயற்படுகின்றனவா?

தமிழ் மக்களின் சுவையான உணவுகளில் ஒன்று பூரி-கிழங்கு. கள்ளுக்குக் கருவாடு போல், பாணுக்கு பட்டர் போல், ஆங்கிலேயரின் மீனுக்கு சிப்ஸ் (Chips) போல, பூரிக்குக் கிழங்கு என்றால் அளவற்ற ஆனந்தம்.

இன்று யாழ்ப்பாணத்தில் பூரி ஏது கிழங்கேது?

மைசூர் மக்களின் குல தெய்வமாகிய பூரி ஜெகநாதரை தமிழ்மக்கள்வணங்கத் தயங்கார். அப்பெருமானை நினைவூட்டும் பூரி இன்று யாழ்ப்பாணத்தில் ஏது? வெறுங்கிழங்கு முழமிடுமா என்று கவலையில் வாடும் மக்களுக்கு இந்திய தூதுவராலயஅதிகாரி திரு. பூரி புதிய உற்சாகமூட்டியது வெறுங்கிழங்கை ஒதுக்கிவிட்டது.

## சிரமதானம் மூலம் பாதை திருத்தம்

யாழ்ப்பாணம், செவ்

கிளிநொச்சி புதுமுறிப்பை அடுத்துள்ள நாவலர் பண்ணை-வள்ளுவர் பண்ணை ஊடாகக் கிளிநொச்சி கோணாவில் வீதியிலிருந்து செல்லும் பாதை சிரமதானப்பணி மூலம் செப்பனிடப்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் உள்ள சர்வோதயத் தொண்டர்கள், சர்வோதயப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கிராம மக்கள் இச்சிரமதானத்தில் பங்கு கொண்டனர். சிரமதானத்தில் ஈடுபட்டவர்களுக்கு சர்வோதய இயக்கத்தால் உணவு வழங்கப்பட்டது. [ப]

# எம்.ஜி. ஆரின் மனிதநேயம்! இல.தலைவர்களுக்கு இல்லையே

தமிழ்நாடு முதல்வர் இலங்கைத் தமிழ்மக்களுக்கு உணவு, உடை மருந்துவகைகள் உதவுவதற்காக 4 கோடி ரூபா ஒதுக்கியுள்ள செய்தி இலங்கை அமைச்சர்களுக்கு வந்து கிடைத்ததோ இல்லையோ, "இதுதான் இந்தியப் பிரதம மந்திரியின் இரட்டைவேடம்" என்று அமைச்சர் ஒருவர் விமர்சித்தாராம்.

அதாவது தமது நாட்டில் பஞ்சாப் பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டுவதற்கு முழுமூச்சுடன் செயல்பட்டுவரும் ராஜீவ் காந்தி அண்டைநாடான இலங்கையில் 'பயங்கரவாதிகள்' அரசுக்கு எதிராகச் செயல்படுவதற்கு ஆதரவு வழங்கி வருகிறார் என்பது இலங்கை அரசின கருத்து.

பஞ்சாப்பில் ஏற்பட்டுள்ள பிரிவினைவாதஅடிப்படைக்கும், இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரிவினைவாத நிலைமைக்கும் மலைக்கும், மடுவுக்குமுள்ள வித்தியாசம் என்பதைப்புரிந்துகொள்ளவேண்டும்.

### பி. எஸ். பி.

அங்கே சீக்கியர் என்ற ஓர் இனம் இருக்கின்றது. அதன் மதம், மொழி, கலை, கலாசாரம் என்பவை தனத்துவமானவை. அதற்கென்றே ஒரு பிரதேசம் உண்டு என்ற நிலைமை அங்கீகரிக்கப்பட்டுதம்மைத்தாமே ஆள்வதற்கான அரசியல் அந்தஸ்தும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசில் போதிய நிர்வாகப் பங்கும், நாட்டின்உயர்பதவியான ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்து முப்படைத் தளபதியாகவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இன்னும முப்படைகளிலுமே சீக்கிய இனத்தவர்கள் போதிய அளவு பணியாற்றவும், காலத்துக்குக்காலம் சேவைமூப்புக்கு ஏற்றாற்போல் தளபதிகளின் அந்தஸ்துக்கு உயர்வதற்கான வசதியும் உண்டு.

இன்னும் பலவற்றையும் கூறலாம். இந்நிலையில்தான் அங்குபிரிவினைவாதம் தோன்றி அதனைச் சமாளிப்பதில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது.

எனவே பஞ்சாப் நிலைமைகளோடு இங்குள்ள தமிழர் நிலைமையை ஒத்துப்பார்க்க முடியாது.

### மற்ற மாநிலங்களும் உதவலாம்

அதுசரி, தமிழ்நாடு மக்கள் ஏன் இலங்கைத் தமிழர் விடயத்தில் இவ்வளவு அங்கலாய்ப்புக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழ்நாடு முதல்வர் ஏன் 4கோடி ரூபாய் உதவுவதற்கு ஏற்பாடு செய்கின்றார்?

"உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுகிறார்கள்" என்ற பல்லவியைப் பாடுகிறவர்கள் முதலில் மேற்படி கேள்விக்குப் பதிலைக்கண்டு பிடிப்பார்களாக.

ராணுவத்தின் படுபாதகச் செயல்களால் ஒரு லட்சம் பேருக்குமேல் 'தமிழ்நாட்டுக்கு ஓடித் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள் என்பதை ஏன் மறந்துவிடுகிறாகள்?

இங்கே நடக்கும் அட்டூழியங்களை அவர்கள் கதைகதையாகவல்லவா அங்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இங்கே தொலைபேசித் தொடர்புகளைத் துண்டித்து விட்டீர்கள். இதனால் இப்பொழுது என்ன கொடுமை நடந்தாலும் வெளிஉலகுக்குத் தெரியாது. இங்கே போதிய உணவுப்பொருள்கள் வந்து சேரமுடியாது. எரிபொருளுக்குத் தடை விதித்து விட்டீர்கள். தினமும் மக்கள் நெருக்கமாகவுள்ள பகுதிகளில் ஷெல் அடிக்கிறீர்கள். ஹெலிகாப்டர்களால் சுடுகிறீர்கள், விமானங்களிலிருந்து குண்டு போடுகிறீர்கள். இப்படிக் காயமடைகிறவர்களுக்கு சிகிச்சையளிக்கும் ஆஸ்பத்திரியையும்மூடிவிட எத்தனிக்கிறீர்கள்

இவை அத்தனையையும் அருகில் சுமார் 28 மைல் தொலைவிலிருந்து கேட்டுப் பார்த்துக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டவர்கள் கொதித்தெழுவது இயற்கை. அந்த மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்குமுகமாகவே முதல்வர் 4 கோடி ரூபாய் பெறுமதியான உணவுப்பொருள், மருந்து வகைகளை கொடுத்துதவ முன்வந்துள்ளார்.

இதைப்பின்பற்றி வேறுமாநிலங்களும் இவ்வாறு செய்ய முன்வரலாம். மத்திய அரசே இப்படி முன்னர் ஆலோசனை செய்தது.

எனவே இது பற்றி குய்யோ முறையோவென்று குரல் எழுப்பும் இலங்கை அதிகாரிகள் தாம் மேற் கொண்டுள்ள அபத்தமான காரியங்களை வாபஸ் பெற்று சற்றுநிதானமாக நடந்து கொண்டால் பயனுண்டு.

குடாநாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்கி பொருட்கள் தாராளமாக கிடைக்க வசதி செய்தால், தொலைபேசித்துண்டிப்பை நீக்கினால் ஆஸ்பத்திரியைமூடும் யோசனையைக் கைவிட்டால், இப்பகுதி மக்களையும் மனிதர்களாகக்கருதி மனிதநேயத்துடன் நடக்க ஆரம்பித்தால் எம். ஜி. ஆரும் தமிழ் நாடும் இந்த அளவுக்கு போய் இருக்க மாட்டார்கள். இந்நிலைமை இப்படியே நீடிக்குமானால் சிக்கல்களும் நீடித்துக்கொண்டேதான் இருக்கும்.

### அசோகன் எங்கே!

கலிங்கத்தின் மீது அசோகன் படை எடுத்தான், அக்குரோணிக் கணக்கில் கலிங்கத்து மக்களை கொன்றொழித்து வெற்றிக்கொடியை நாட்டினான்.

வெற்றிக்களிப்பில் போர்க்களத்தைக் சுற்றிப்பார்த்துக் கொண்டுவந்த அசோகனின் காதில் ஒரு குரல் விழுந்தது.

"புத்தம் சரணம் கச்சாமி" என்றபடி அவன் முன்காட்சியளித்தார் ஒரு புத்தபிக்கு. போர்க்களத்தில் புத்தபிக்குவுக்கு என்ன வேலையென வெகுண்டெழுந்த பொழுது "நோயுள்ள இடத்தில்தானே வைத்தியர்களுக்குவேலை எனக் கூறி அன்புமார்க்கத்தின் அரியபோதனைகளை அவனுக்கு உபதேசித்தார் புத்தபிக்கு.

அன்றுமுதல் நாடு பிடிக்கும் எண்ணம் அவன் மனதிலிருந்து அகன்றது. மனிதகுலத்தை அன்பினால் ஆட்சிசெய்ய சபதம் எடுத்தான். அதன் காரணமாக உலகமெங்கும் புத்த தர்மத்தைப்பரப்பவும் வழிசெய்தான்.

அதே புத்த தர்மத்தைத்தான் இன்றைய இந்த நாட்டு ஆட்சியாளர்களும் கைக்கொள்வதாகக் கூறப்படுகின்றது. புத்த சமயம் இந்த நாட்டின் அரசாங்க மதமாகவும் இருக்கின்றது.

ஆனால் புத்தபெருமான் போதித்த அன்புமார்க்கம் ஒரு துளியளவும் கூட வெளிப்படக்காணோம்.

இன்று 'தமிழ் பயங்கரவாதி பற்றியே தென்னிலங்கையில் உள்ள அனைவருமே குரல் எழுப்புகிறார்கள். இந்த நிலையை உருவாக்கியவர்கள் யார் என்று அவாகளுக்குத் தெரியாமல் இல்லை.

தமிழர்கள் என்னத்தைக் கேட்டார்கள்? தங்கள் உரிமைகளைப் பறிக்கவேண்டாம் என்றுதான் கேட்டார்கள். படிப்படியாக உரிமைகள் பறிக்கப்பட்டது போக எதிர்க்குரல் எழுப்பியமைக்காக வன்செயல்கள் மூலம் வாயை அடக்க முயன்றார்கள்.

சொந்த மண்ணிலேயே அவர்களை அந்நியர்களாக்கும் நடவடிக்கைகளைப் புகுத்தினார்கள். திட்டமிட்டு ராணுவ பாதுகாப்போடு தமிழ்ப்பகுதிகளில் சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்தினார்கள்.

இவைகளை எதிர்த்து பயனற்றுப் போனதின் விளைவாகவே இன்றைய நிலை. புத்த தர்மத்தின் பேரால்போர் பற்றிய நினைப்பையே ஒழித்தான் அசோகன். புத்த தர்மம்பேசிப் பேசியே போர் நடத்துகிறார்கள் இங்கே.

தமிழ்மக்களின் குறைபாடுகள் பற்றி வன்முறைகள் ஓய்ந்த பின்தான் கவனிக்கப்படும் என்கிறார் பிரதமர் திரு. பிரேமதாசா. இல்லையெனில் ஏனைய மக்கள் பிரிவினரும் தமது குறைகளை நிவர்த்திப்பதற்காக வன்முறையில் இறங்கிவிடுவார்கள் என்கிறார் அவர்.

ஏனைய சமூகத்தவர்கள் தமிழ் சமூகத்தவர்களைப் போல்தான் நடத்தப்பட்டார்களா? நடத்தப்படுகிறார்களா? சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் சிங்கள அரசாங்கங்கள் செய்துவந்துள்ள உரிமை அபகரிப்புக்களின் காரணமாகத்தானே இந்த நிலை ஏற்பட்டது. இதற்கும் ஏனைய சமூகப்பிரிவுகளுக்கும் ஏன் பிரதமர் முடிச்சுப்போட முனைகிறார்?

தமிழ்மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக சிங்கள மக்கள் கிளர்ந்தெழுவார்கள், அல்லது கிளர்ந்தெழச் செய்யப்படுவார்கள் என்பதுதான் இதன் அர்த்தம் போலும்.

### சுதுமலை அம்மன்

## அருளுள்ள தெய்வம் நீ தானேயம்மா

உலகெலாம் வணங்கும் ஒரு பெருந்தேவி
உமையென ஓதிடுந்தாயே!
அலகிலா அண்டம் அனைத்தையும் ஈன்ற
அரும் பெருஞ் சக்தி அம்பிகையே!
நிலவுலாஞ் சடையோ னிடத்தினிலமர்ந்த
நிமலையே! நமதிடர் கடிந்து பலவருள்
பொழியும் சுதுமலை அமர்ந்த பவானியே
புவன ஈஸ்வரியே அருளுள்ள தெய்வம்
—நீ தானேயம்மா

—திருமதி காவேரி யோகநாதன்

# "30 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கைத் தமிழர்களுக்காக போர்க்குரல் கொடுத்தவர் ஆதித்தனர்"

## சிலைதிறப்பு விழாவில் எம். ஜி. ஆர். புகழாரம்

சென்னை மே 25

"30ஆண்டுகளுக்குமுன்பே இலங்கைத் தமிழர்களின் உரிமைக்காக போர்கக்குரல் கொடுத்தவர் அமரர் சி. பா. ஆதித்தனர்". தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் சென்னையில் அன்னரின் சிலையைத் திறந்துவைத்துப் பேசுகையில் இவ்வாறு புகழாரம் கூட்டினர்.

இவரது தினத்தந்தி பத்திரிகையில் வெளியான தமிழ்நடைதான் தமிழகம் கல்விவளர்ச்சியுள்ள மாநிலமாக உயர்வதறகு உதவியாக இருந்ததென்றும் கூறினர் தமிழக முதல்வர்.

அமரர் ஆதித்தனர் மறைந்து ஆருவது ஆண்டு நினைவுவிழ■வை யொட்டி சென்னையில் ஹரிஸ் வீதியில் பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்திற்கு அண்மையில் அன்னரது ஆறரை அடி உயரமான வெண்கலத்திலான உருவச்சிலை ஒன்று நிறுவப்பட்டது.

தமிழகத்தில் பாமர மக்களைப் படிக்கவைத்தவர் அமரர் ஆதித்தனர்என்றும் கூறினர் திரு. எம்.ஜி ஆர்.

### ம. பொ. சி. உரை

மாலைநேரத்தில் மட்டுமே செய்திப் பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருந்த வேளையில் தமது பத்திரிகையை காலையிலேயே வெளியிட்டு புரட்சி செய்தார்அமரர்ஆதித்தனர் என்ருர் விழாவின் தலைவர் திரு. ம. பொ. சி.

### விழாவில் தினத்தந்தி முதல்பிரதி பெற்றவர்

1942ம்ஆண்டு தின த்தந்தி பத்திரிகை முதன்முதலில் வெளிவந்தபோது அதன் முதல் பிரதியை வாங்கிய மூதறிஞர் கி. ஆ. பெ. விஸ்வநாதமும் இவ்விழாவில் கலந்துகொண்டமை விழாவுக்குப் பெருமை தேடித்தந்தது. பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் அமரர் ஆதித்தனர் என்று புகழ்மாலை சூட்டினர் மூதறிஞர் விஸ்வநாதம்.

### ஆதித்தனர் சாலை

விழாவில் கலந்துகொண்ட இந்திரா காங்கிரஸ் பிரமுகர் திரு குமரி அனந்தனின் வேண்டுகோளுக்கு அமைய சிலை அமைந்துள்ள ஹரிஸ் ரோட், ஆதித்தனர் சாலை என பெயர் மாற்றம்செய்யப்படுவதாக முதல்வர் அறிவித்தார்.

### புலமைப் பரிசில்

தமிழகத்தில் 'எஸ் எஸ் எல் ஸி' பரீட்சையில் தமிழில் முதலாவதாகச் சித்தி பெறும் மாணவருக்கு வருடாந்தம் 2,500 ரூபாவும் 'பிளஸ் 2' பரீட்சையில் முதலிடம் பெறும் மாணவருக்கு வருடாந்தம் மூவாயிரம் ரூபாவும் அன்பளிப்பாகவழங்கப்படும் என தினத்தந்தி பத்திரிகையின் இயக்குநகர் திரு. சிவந்தி ஆதித்தன் விழாவில் தெரிவித்தார்.



# "யாழ்ப்பாணம் சுடுகாடாகுமுன்பே நடவடிக்கைஎடுங்கள்"

## ராஜீவ், எம். ஜி. ஆரிடம் ம.பொ.சி. வேண்டுகோள்

சென்னை, மே 25

"யாழ்ப்பாணம் சுடுகாடாகுமுன் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியும் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆரும் இணைந்து ■■வது நடவடிக்கை எடுத்து அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும்".

இவ்வாறு தமிழ் உயர் மட்டக் குழுத் தலைவரும் தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்களில்ஒருவருமாகிய திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரபல பத்திரிகையாளர் அமரர்சி.பா.ஆதித்தனரின் 6வது நினைவுதினத்தை யொட்டி இடம்பெற்ற அன்னரது சிலைதிறப்புவிழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையிலேயே திரு. ம. பொ. சி. மேற்கண்டவாறு கூறினர்.

தமிழக முதல்வரும் கலந்துகொண்ட இவ்விழாவில் அவர் முன்னிலையிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

தமிழர்களின் மரபும்நெறியும் யாழ்ப்பாணத்திலேயே அதிகம் வேரூன்றியுள்ளது என்றும் திரு. மா. பொ. சி. கூறினர்.

# "வளைகுடாவில் சோவியத் ஊடுருவல்" — அமெரிக்கா

# "அமெரிக்க இராணுவ நடமாட்டம் தீவிரம் — சோவியத் யூனியன்

லண்டன், மே. 25

பாரசீகவளைகுடாவில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி அங்கு சோவியத்யூனியனின் ஊடுருவலுக்கு வாய்ப்பாகவுள்ளது என்று அமெரிக்காவும்—

வளைகுடாவில் அமெரிக்கா மேற்கொள்ள இருக்கும் பாதுகாப்பு நடவடிக்கை அப்பிராந்தியத்தில் அதன் இராணுவ நடமாட்டத்தை தீவிரப்படுத்துவதற்கு ஒரு சாட்டாக அமைந்துள்ளது என சோவியத்யூனியனும் பரஸ்பரம் குற்றம் சாட்டியுள்ளன.

வளைகுடாவில் பயணம்செய்யும் குவைய்த்தின் எண்ணைத்தாங்கிக்கப்பல்கள் அவற்றின் பாதுகாப்புக்காக அமெரிக்கக் கொடிகளைப் பறக்கவிடுவதுடன் அவற்றில் அமெரிக்க மாலுமிகளைக் கடமையில் ஈடுபடுத்தலாமென அமெரிக்கா அறிவித்துள்ளபோதிலும் வளைகுடாவில் செல்லும் எண்ணைத்தாங்கிக் கப்பல்கள்மீது ஈரான் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தும் என ஐ. நா. வின் ஈரானிய பிரதிநிதி தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

குவைய்த்எண்ணை கப்பலைத் தாக்கும் எண்ணம் ஈரானுக்கு இருக்குமானல் அமெரிக்கப பாதுகாப்பு இருந்தாலும் அக்கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல்களை நடத்தியே தீ மென்றும் ஈரானியப்பிரதிநிதி கூறினர்.

குவைய்த் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் ஆபத்து இருக்கிறது எனவே அமெரிக்காமாற்றுவழிஒன்றை நாடவேண்டுமென்றும் தெரிவித்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. ஹஸ்பாவைன் பேகர். வளைகுடாவில் சோவியற் யூனியனின் ஊடுருவல் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் கூறினர்.

அமெரிக்காவின் இக்கொள்கை பெருப்ஆபத்தை ஏற்படுத்தும்என்றும் வளைகுடாவில் அதன் இராணுவநடவடிக்கையைத் தீவிரப்படுத்த அமெரிக்கா இதை ஒரு சாட்டாக்கியுள்ளதென்றும் சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' தெரிவித்துள்ளது.

## இன்றைய பலன்

மாதம்: வைகாசி
திகதி: 12 (1987-5-26)
கிழமை: செவ்வாய்
திதி: சதுர்த்தசி மு. இ. வரை
நட்சத்திரம்: பரணி.

மேடம்: வாய்வுக் கோளாறினல் வேதனைப்படுவீர்கள். எதிரிகளும் எக்காளமிடுவர். எவ்விடயத்திலும் அதிக கவனம் செலுத்தவும்.

இடபம்: அறவழியில் நாட்டம் பிறக்கும் தாராளசிந்தை மேலிடும். குறிக்கோள் வெற்றியுமுண்டாம்.

மிதுனம்: பொருள் விரையமாகும். வீண்பழியும் கேட்க நேரிடும். கடமையில் கவனம் செலுத்தவும்.

கடகம்: வாழ்க்கையில் வசதி பெருகும். பந்தபாசம் தலைதூக்கும் கடமையில் சம விருதத்தி ஏற்படும்

சிங்கம்: வித்தையில் வெற்றியுண்டு. புதிய நண்பர்களும் புடைசூழ்வர். வளமான வாழ்வுமுண்டாம்.

கன்னி: முகமன் பேசுவோர் விடயத்தில் அவதானம் வேண்டும். கடமையிலும் மோசடிகள் இடம்பெறும். கொடுக்கல் வாங்கலைத் தவிர்க்கவும்.

துலாம்: நீண்டநாள் கனவு நனவாகும். பணவரவு முண்டாம் தொழில் நிலையும் சீர்பெறும்.

விருச்சிகம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள் அவசர முடிவைத் தவிர்க்கவும். முதலீடு செய்வதை தவிர்க்கவும்.

தனுசு: புண்ணிய விருப்பு மேலிடும். வெளியிடத்துப் பயணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம் குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும்.

மகரம்: பூமிலாபம் உண்டு. இனபந்துக்கள் ஆதரவு கொடுப்பர் தொழில் நன்மாற்றமுமுண்டாம்.

கும்பம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் சுற்றுடலிலும் மதிப்புயரும். தொழில் மகிழ்ச்சியுண்டு.

(5-ம் பக்கம் பார்க்க)

### 'எவாக்ஸ்' விமான கொள்வனவு

# பாக். நடவடிக்கையை இந்தியா புறக்கணிக்க முடியாது

### பாதுகாப்பு அமைச்சர் 'பந்த்' கூறுகிருர்

புதுடில்லி, மே. 25

"பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து 'எவாக்ஸ்' விமானங்களை வாங்க இருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு புதியதொரு அச்சுறுத்தலாகும். இதனை இந்தியா புறக்கணிக்கமுடியாது".

இவ்வாறு இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. கே சி. பந்த் புதுடில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

அணுசக்தியைஅமைதிநோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்பதே இந்தியா ஆரம்பகாலத்திலிருந்துகடைப்பிடித்து வரும் கொள்கை. ஆனல் பாகிஸ்தான் அணுகுண்டைக்காட்டிஞல்இந்தியா தனது கொள்கையை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இந்தியா தனது அண்டை நாடுகளுடன் ஒற்றுமையுடன் இருக்கவே விரும்புகிறது.

### 'பிஜி' விவகாரம்

# ராஜீவின் கடிதத்திற்கு தட்சர் பாராட்டு

புதுடில்லி, மே. 25

'பிஜி'தீவில் இராணுவபுரட்சித்தலைவர் ரபுக்கா இனத்துவேஷ அறிக்கைகள் வெளியிட்டு வருவது குறித்து பிரிட்டன் ஆழ்ந்தகவலை கொண்டுள்ளதாக இந்திய வெளியுறவு துணைஅமைச்சர் திரு கே நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.

'பிஜி'யின் இன்றைய நடப்பு குறித்து பிரிட்டிஷ் அமைச்சர் திரு. ஜெவ்ரி ஹோலுடன் லண்டனில் கலந்துயாடிய பின்னரே திரு. நட்வர்சிங் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவப்புரட்சியை அடுத்து 'பிஜி'யில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த காமன்வெல்த்நாடுகளின் ஆதரவைத் திரட்டும் இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி பல உலகத் தலைவர்களுக்குக் கடிதமெழுதியிருந்தார். திரு. ராஜிவின் இக்கடிதத்தை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் வெகுவாகப்புகழ்ந்து பாராட்டிவிட்டு அதற்கு பதில் எழுதியுள்ளார் என திரு. ஹோல் தம்மிடம் தெரிவித்ததாகவும் திரு. நட்வர்சிங் தெரிவித்தார்.

## இன்றைய பலன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்: அமைதி குலையும் எதிலும் தடைகள் பல தோன்றும். அவப்பெயர் கேட்கவும் நேரிடும். அவதானம்.

திருமலை ரவீந்திரன்


## பிரயாண ஒழுங்குகள்

★ நோர்வே

★ ஜேர்மனி

★ லண்டன் (U. K.)

**நோர்வே:-**

அடுத்த நோர்வேகுழு 5-6-87 புறப்படவுள்ளது. எனவே ஆண், பெண் இருபாலாரும் உடன் எமது காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

**ஜேர்மனி:-**

ஜேர்மனிக்கு கொழும்பிலிருந்து நேரடிப்பிரயாணம் செய்யலாம் என்பதை அறியத்தருகின்றோம் அத்துடன் ஆண், பெண் இருபாலாரும் செல்லலாம். எனவே செல்லவிரும்புபவர்கள் எமது காரியாலயத்துடன் நேரடித் தொடர்புகொள்ளவும்.

**லண்டன்:-**

லண்டனுக்கு கொழும்பிலிருந்து நேரடிப்பிரயாணம் செய்யலாம் என்பதை அறியத்தருகின்றோம். அத்துடன் ஆண், பெண் இருபாலாரும் செல்லலாம். செல்லவிரும்புவோர்கள் எமது காரியாலயத்துடன் நேரடித் தொடர்புகொள்ளவும்.

**சவுதி அரேபியா:-**

சவுதி அரேபியாவுக்கு பாஸ்போர்ட் கொடுத்த அனைவர்களினதும் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுவிட்டன. போக்குவரத்து சீரற்ற நிலைமையினால் தடங்கல் ஏற்பட்டுள்ளது. எனவே 5ம் திகதி எமது காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

## ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்

**N. பாலா**

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
(பஸ் இல. 764 பலாலி றோட்)

கிளை:-

ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்,
குப்பிளான் சந்திக்கருகாமை, குப்பிளான்.

**தீவுப்பகுதி மக்களுக்கு ஒரு வேண்டுகோள்:**

5-ம் திகதிவரைக்கும் எமது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும். 6-ம் திகதிக்குப்பிறகு எமது தீவுப்பகுதி கிளைக்காரியாலயம் திறக்கப்படும் ஐ. தங்கராசாவுடன் தொடர்புகொள்ளவும்.

(எ-3885)


## குருநகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 6-30 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. குருநகர் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் மீது கடல் பீரங்கிக்குண்டு வந்து வீழ்ந்து வெடித்தது.

அச்சமயம் தாக்குதலுக்கு அஞ்சி இப்பாடசாலைக்குள் தஞ்சமடைந்தவர்களில் 5 பேரே ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

ஒன்றரை வயதுக் குழந்தையொன்று உட்பட சுமார் பத்துப் பேர்வரை காயமடைந்தனர் மலும் ஒரு தாயும்,குழந்தையும் இத்தாக்குதலையடுத்துக் காணாமற்போயுள்ளனர் இவர்கள் சிதறுண்ட சடலங்களில் அடங்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது


இறந்தோர் விபரம்:- சிறுமி தாஸியேஸ் தர்சினி (வயது 5), இவரது தாயார் தாஸியேஸ் ஜெயக்குமார் [வயது 30], இராசமணி (வயது 12), இன்னாசிமுத்து அடிசீலி (வயது 15), கொன்ஸ்ரன்ரைன் தர்ம சரோசா(வயது 22) இவர்கள் அனைவரும் ஸ்தலத்திலேயே உடல்சிதறி உயிரிழந்தனர்.

காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளோர் விபரம்:-
கொன்ஸ்ரன்ரைன் தர்மா-றெக்ஷன் [1½ வயது], கொன்ஸ்ரன்ரைன் தர்மா-ராஸ்மேகன் [3 வயது], பொனபாட்-அன்ரனி கிறிசியன் [4 வயது], (இவர் குழந்தை வலதுகால் துண்டிக்கப்பட்டு உயிராபத்தான நிலையில் உள்ளது), இன்னாசிமு து பவிதா [6 வயது], இன்னாசிமுத்து பாமினி [9 வயது ஆகியோரேயாவர்.

இன்னாசிமுத்து- அக்னசும் [45 வயது], வேறும் சிலரும் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொனபாட்மயூரி [2 வயது] அதிர்ச்சியடைந்த நிலையிலுள்ளது பொனபாட்-குஞ்சம்மா என்பவரதும் இவரது மூன்று மாதக்குழந்தையினதும் நிலை என்னவென்பதுபற்றியெதுவும் தெரியவில்லை. [கு]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு.
K S தம்பிரத்தினம்
[Retd. Traffic Costing officer C G. R]
மலர்வு: 15-02-1924
உதிர்வு: 05-06-1986

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் வாழ்ந்து எங்கள் வாழ்வும் எதிர்காலமும் ஒளிமயமாக வேண்டுமென விரும்பி முயன்ற நீங்கள், மறைந்து ஆண்டுஒன்றாகியபோதிலும் உங்கள் இடைவெளியை நிரப்ப இதுவரையில் எங்களால் முடியவில்லை ஐயா. எங்கள் அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்;
குடும்பத்தினர்.
மாதாங்கோவில் வீதி,
பொலிகண்டி.

சி-9282

## முன்னாள் காவலூர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் ஆறு குண்டுகள் இவ் வீட்டின்மீது வீசப்பட்டன. இங்கு வளர்க்கப்பட்டு வந்த இரு குதிரைகளும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டன. கராஜில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் காரும்சேதமுற்றது.

சுமார் 10 நிமிட நேரம்இத்தாக்குதல் நீடித்தது. ஆட்சேதம் எதுவும் ஏற்படவில்லை. ஆயினும் அயல் வீட்டிலிருந்து எட்டுவயதான அங்கவீனமுற்றசிறுமி ஒருவர்காயமடைந்தார்

வேலணையில் இடம்பெற்ற முதலாவது விமானத்தாக்குதல் இதுவாகும். வேலணை மற்றும் இப்பிரதேசத்தைஅண்டிய மக்கள் கிலி கொண்டு பதுங்குகுழிகளைநாடியும் மறைவிடங்களைத் தேடியும் ஓடித் திரிந்தனர்.

பண்டிதர் ரத்தினத்தின் வீட்டை அண்டிய தென்னை மரங்கள் வாழைகள் என்பனவும் முறிந்து சேதமுற்றுள்ளன.

## 'சேர்' குண்டு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

"ஒரு வீட்டின் பின்பக்கம் கொஞ்சம் அடிபட்டிருக்கு" வீட்டுக்குள்ளே மீண்டும் போடு"

"ஒரு குண்டு மிச்சமிருக்கு அதையும் தள்ளிவிடட்டுமா?"

"அப்படியே செய்"

"சேர், ஒருவாகனத்தில் ஒரு கோஷ்டி வந்து ஒரு வீட்டுக்குள் நுழைகிறது அங்கே போடட்டுமா?

"போடு"

"அவர்கள் போய்விட்டார்கள். வீட்டின் கதவுகள் திறந்து கிடக்கின்றன"

"குண்டு முடிந்து விட்டது போகட்டுமா?"

"முடிந்தவர்கள் எல்லாம் போகலாம்"

"சேர் என்னிடம் இருக்கின்றன"

"நீ போகலாம்"

'சேர் போடட்டுமா!"

"இல்லை நீ வீட்டுக்குப் போகலாம்"

## உணவு முத்திரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யென அறியப்படுகிறது

இதனால் இவற்றைப்பெற்றுவந்த சுமார் 118,000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 570 000 மக்கள் பாதிப்படையலாமென்று கூறப்படுகிறது.

இதேவேளை அரசின் கடல் வலயப் பாதுகாப்புச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டு இம் மாவட்டத்தில் விசேட உணவு முத்திரைகளை பெற்றுவந்த சுமார் 82,000 கடற்றொழிலாளர்களுக்கு கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து உணவு முத்திரைகள் வழங்கப்படவில்லை.

மூன்று மாதத்திற்கு ஒருதடவை வழங்கப்படும் இவ் உணவுமுத்திரைகள் கடந்த ஆறு மாதங்கள க வழங்கப்படாததினால் மேற்படி தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்புற்றிருப்பதாக தெரிவித்துள்ளனர்

## சுதுமலை

(1ம் பக்கத் தொடர்ச்சி]

னங்களுடன் வந்து சேர்ந்து கொண்டது.

சுதுமலை அம்மன் கோயில் மகோற்சவ ஆரம்பம் களை கட்டியிருந்தது. நகர்ப்பகுதிகளிலிருந்தும் ஒதுக்குப் புறமான கிராமச் சூழ்நிலையில் இக் கோயில் காணப்படுவதால் இங்கு கொடியேற்ற உற்சவம் காண பக்தர்கள் அதிகளவில் கூடியிருந்தனர்.

கொடியேற்றம் ஆரம்பமாவதற்கு ஒருசில நிமிடங்கள் இருக்கையிலேயே சுதுமலைப் பகுதியை நோக்கிவந்த இரு பொம்மர்கள் இந்த ஆலயச் சுற்றாடலில் 'இடியென'க் குண்டு வீச்சை மேற்கொண்டன.

இத்தாக்குதலில் ஆலய வீதியில் கடலை வியாபாரம் செய்துகொண்டிருந்த இந்திய வம்சாவளி பெண்ஒருவர் உட்பட ஆறுபேர் கொல்லப்பட்டனர்.

சுமார் ஆறுவீடுகள், கடைகள், ஒரு நூல்நிலையம் ஆகியனவும் சேதமடைந்தன. சுமார் 25 பேர் வரைகாயமடைந்தனர்.

குண்டுவீச்சுத் தாக்குதலையடுத்து சுதுமலை அம்மன் கொடியேற்றம் நேற்று கைவிடப்பட்டது. (ஒ)


**லிடோ** யாழ். நகர்
10-30, 2-30, 4-30, 6-30
**Flash Dance**
(Color)

**வெலிங்டன்** திரையில்
10-30, 2-30, 6-30
நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கே. ஆர். விஜயா, சுந்தரராஜன், ஏ.வி எம்.ராஜன்,வை. ஜி. மகேந்திரன், நிழல்கள் ரவி, தேங்காய் சீனிவாசன்
**ஊரும் உறவும்**
கலர்


## நினைவஞ்சலி







| 7-வது ஆண்டு | 2-வது ஆண்டு | 2-வது ஆண்டு |
|---|---|---|
| கு. இராஜகுலசிங்கம் | இ. இராஜயோகி | ச. தர்சிகா |
| தோற்றம்: 14-01-1914 | தோற்றம்: 19-11-1942 | தோற்றம்: 16-11-1983 |
| மறைவு: 04-12-1980 | மறைவு: 18-05-1985 | மறைவு: 18-05-1985 |

திதி: 26-05-1987

அன்பு, பாசம், பண்புடன் எம்முடன் வாழ்ந்தீர்கள். இன்று எங்களைவிட்டுப் பிரிந்து 7 ஆண்டுகள், 2 ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவு எங்களைவிட்டு நீங்காது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

| | | |
|---|---|---|
| மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள். ஆகியோர் | அம்மா, மகள்மார், சகோதரங்கள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள். | அம்மா, அப்பா. தங்கை, பேர்த்திமார், மாமா, மாமிமார், சின்னம்மா, சித்தப்பாமார், மைத்துனர், மைத்துனிமார், சகோதரங்கள். |

"அமிர்த வாசம்"
மானிப்பாய் தெற்கு,

கு. இ. பாலசுப்பிரமணியம்,
(எ-026)


## எமது இன்றைய புதிய வெளியீடு

(1) ரகுமான், ரேவதி நடித்த
**'சிந்து நதிப் பூவே'**
மற்றும் பல
ஆங்கில வெளியீடுகளும்
வெளியாகியுள்ளன.

## வீடியோ பிரசாத்

இல 424, கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம்.
[ஏ-028]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 26-5-87

★ மதனளுபிரிக்காவல் ருந்து ஆயுதம் ★ இஸ்ரேலியரின் ஒற்றர்கள் ★ பாகிஸ்தானிய விமானங்கள்

# தமிழர்களைக் கொன்று குவிக்கும்

# இலங்கை அரசின் நடவடிக்கை

## தமிழக விவசாய அமைச்சர் சாட்டை

சென்னை, மே-26

''இலங்கையரசின் நடவடிக்கைகளினுல் வாழ்விழந்து நிர்க்கதியாகியுள்ள தமிழ் மக்களுக்கு மனிதாபிமான ரீதியில் உதவுவதற்காகவே தமிழக முதல்வர் திரு. எம் ஜி. ராமச்சந்திரன் 4 கோடி ரூபாவை வழங்கியிருக்கிருர். அதுவும் மத்திய அரசின் அனுமதியுடனேயே இலங்கையில் அல்லற்படும் தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள்மூலமேஇந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி தமிழக அரசின் பணமுமல்ல. இதனை நாம் போராளிகளுக்கு வழங்கவுமில்லை''.

இவ்வாறு இலங்கைத் தமிழ் மக்களுக்குத் தமிழக அரசு வழங்குவதாக அறிவித்துள்ள 4 கோடி ரூபா நிதியுதவி குறித்து இலங்கையரசு தமிழக அரசின்மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள்பற்றி கருத்துத் தெரிவித்த தமிழக உணவு அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற அமரர் சி. பா. ஆதித்தனுர் சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

இந்த நிதியுதவியை வழங்குவதனுல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயுள்ள நல்லுறவு பாதிக்கப்படுமென இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ஜனுப் ஏ ஸி எஸ். ஹமீட் தெரிவித்திருந்தது குறித்துக் கருத்துத் தெரிவித்த திரு. இராமச்சந்திரன் மேலும் கூறியதாவது:-

''இந்தியாவுக்கு விரோதமான தென்னுபிரிக்காவிலிருந்து ஆயுதங்களை வாங்கியும், பாகிஸ்தானிலிருந்து விமானிகளை வரவழைத்தும், இஸ்ரேலின் ஒற்றர்களை ஊடுருவச் செய்தும், பிரிஷ்டிஷ் கூலிப்படையைக் கொண்டுவந்து தமிழர்களைக் கொன்று குவிக்கும் இலங்கையின் செயல் இந்தியாவின் அண்டைநாட்டுக்கு அழகாகுமா?

யாழ்ப்பாண மக்கள்மீது இலங்கையரசு விதித்துள்ள பொருளாதார முற்றுகையினுல் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவுவதற்கு அந்த நிதியை வழங்கியதில் என்ன தவறு இருக்கிறது?

இதுகுறித்து இலங்கையரசு தமிழக அரசுமீது சுமத்திய குற்றச் சாட்டுக்கள் வீண் பழியாகும்''. என்ருர்.

## புறக்கோட்டையில் 10தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு, திங்கள்

புறக்கோட்டையில் 10தமிழ் இளைஞர்கள் நேற்றுமுன்தினம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்புஉயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள்கதிரேசன் வீதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டதாகவும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலிருந்து இவர்கள் வந்திருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது. இந்த இளைஞர்கள் மீதான விசாரணைகளை குற்றப் புலனுய்வுத்துறையினர் ஆரம்பித்துள்ளனர். (க)

## 'போராளிகளுக்கு தமிழகஅரசுபணம்வழங்கவில்லை!

## இல. அரசின் கூற்று விஷமத்தனமானது''

### — எம். ஜி. ஆர்

சென்னை, மே-26

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் இயக்கங்களுக்குத் தமிழ்நாடு அரசு பணம் கொடுத்திருப்பதாக இலங்கையரசு குற்றஞ் சாட்டியிருப்பதைத் தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் மறுத்துள்ளார். இலங்கையரசின் கூற்றுத் தவருனதும், விஷமத்தனமானதுமாகுமென்று மறுப்புச் சென்னையில் அவர் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ்அகதிகளுக்காகத் தமிழக அரசு வழங்கிய நான்கு கோடி ரூபாய் தமிழ்நாட்டுப் பொதுமக்கள் திரட்டிக்கொடுத்த பணமே தவிர மத்திய அரசோ, மாநில அரசோ இதனை வழங்கவில்லை என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ்ப் போராளிகளிடம் இந்த உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதாக இலங்கையரசு கூறுவது முற்றிலும் தவருனதும் விஷமத்தனமானதும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

## மரண அறிவித்தல்

### சண்முகம் திருநாவுக்கரசு

உடுவிலைச் சேர்ந்தவரும், நீர்கொழும்பு 'வில்லியாகம' எஸ்ரேற் மேற்பார்வையாளருமான திரு. ச. திருநாவுக்கரசு அவர்கள் காலமாகிவிட்டார். இவர் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், சிவகுமாரன் (சேகர் அன்ட் பிரதர்ஸ்), கலாவல்லி ஸ்ரீராம், சிவாஜினி, ஸ்ரீஸ்கந்தகுமார் [சுவிற்சலாந்து], சுதர்ஜினி ஆகியோரின் அருமைத் தந்தையும், முத்தையா [ஆசிரியர்]. அன்னபூரணம் கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீராமின் அன்பு மாமனுரும் ஆவார். அன்னுரது ஈமைக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை 26-05-87 இன்று காலை 10-00 மணிக்கு அன்னுரின் 'சந்திரபுரம்' இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: தி. சிவகுமாரன். [சி-9286]

### திருமதி பாக்கியம் கந்தையா



திருமதி பாக்கியம் கந்தையா அவர்கள் 25-5-87அன்று காலமாகிவிட்டார். அன்னுர் தொல்புரம் மு. கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், மு. விசாகபூஷணி [ஆசிரியை. மூளாய் அ. மி. த. க. பாடசாலை], விசாகரத்தினவேல் [Foreman சவூதி அரேபியா], ம லோகேஸ்வரி Rtd. Nursing officer, D. H. புத்தளம், சரவணபவன் [ஓவியர்] செ. கோமதிதேவி [ஆசிரியை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி], சயலொளிபவன் [பொறியியலாளர்,பிரான்ஸ்] ஸ்கந்தமலர், இ. குகபூஷணி [இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்], சோ. கோடீஸ்வரி [ஜெர்மனி] அ ஸ்ரீகௌரி [பிரான்ஸ்], கேதீஸ்வரி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு அன்னையாரும், நா. முருகையா [அதிபர், மூளாய் அ.மி. த. க. பாடசாலை], வி. சிவமணி, Dr. ம. மரியதாசன் [R M P, R. D. H. S office, புத்தளம்], ச. கமலாதேவி, நா. செல்வநாதன் [விக்டோரியாக் கல்லூரி, சுழிபுரம்], ச. இராமலிங்கம் (இந்துக் கல்லூரி வட்டுக்கோட்டை), கா சோமசுந்தரம் [ஜெர்மனி], T அல்போண்ஸஸ் [பிரான்ஸ்] ஆகியோரின் மாமியாரும், க. இராசரத்தினம் (ஓய்வுபெற்ற கல்வியதிகாரி, திருகோணமலை]. க. இரத்தினவேல் [ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்], ச. பசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மு. நாராயணமூர்த்தி (கனடா), கி. ஜெகதாம்பிகை [ஆசிரியை, இநதுக்கல்லூரி, காரைநகர்]. மு. லலிதாம்பிகை [ஆசிரியை, மெ.மி.த க. பாடசாலை], மு. விசாகதாசன் (பிரான்ஸ்), ப. சாரதா, வி. மனேகரன், வி. சுகன்யா, ம. ஜீவதாசன், ம. லோகதாசன், ம. தேவகி, ம. ஜானகி, ச. வேதாரணி,செ. ஜயந்தி. செ ஜனனி, செ பிரணவன், சயலொளிபவன் சேந்தன் (கொழும்புத்துறை), சோ. மயூரன், அ. நர்மதா ஆகியோரின் அன்புத் பேத்தியும், பிரதீபன், பிரியா, பவித்திரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னுரின் இறுதிக் கிரியைகள் செவ்வாய்க்கிழமை 26-5-87 இன்று காலை 10 மணியளவில் தொல்புரத்திலுள்ள அன்னுரின் இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(சி-9287) தகவல்: வி. மனேகரன்.

## OBITUARY

### Mr. A. R. ABRAHAM

The remains of the late Mr. A. R. Abraham will be removed for intermentat St Mary's burial grounds Kopay on Tuesday 26-th instant at 2 p m.

D. T. John,
Killuwanai Lane, Kopay.

(C 9281)

## காயமடைந்தோர் விபரம்

யாழ்ப்பாணம், செவ்

சுதுமலை விமானத்தாக்குதலில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர்விபரம்:

மனேகரன் நாகேஸ்வரி [வயது 32] சுதுமலை, திருச்செல்வம் வேணி [வயது 19] சுதுமலை, வீரரத்தினம் அன்னக்கிளி [வயது 30] சாவற்கட்டு, இராசா ஆச்சிமுத்து [வயது 48] சுதுமலை, இரத்தினம் அழகம்மா வயது 50] சுதுமலை, சந்திராதேவி [வயது 30] சுதுமலை, மகாலிங்கம் கெங்காதேவி [வயது36]மானிப்பாய், பொன்னம்பலம் இராசமணி [வயது 0] சுதுமலை, சோமசுந்தர குருக்கள் [வயது 40] சுதுமலை, ஐயாத்துரை மன்மதராசா [வயது 32] சுன்னுகம், மகேஸ்வரன் வாசுதேவன் [வயது 21] சுதுமலை, சி. சண்முகலிங்கம் [வயது30] சுதுமலை, சி. இராசேந்திரம் [வயது 30] மானிப்பாய், அருச்சுணன் - தயா [வயது 21] மானிப்பாய், செல்லத்துரை ராஜகுமார் [வயது 40] சுதுமலை, திருநாவுக்கரசு - குணசுதன் [14 வயது] சண்டிலிப்பாய், சண்முகம் - கருணுகரன் [வயது 39] அராலி தெற்கு, ரையப்பா ஜெகராசசிங்கம் [வயது 0] சதுமலை, சிவமூர்த்தி சிவலிங்கம் [வயது 31] மானிப்பாய், சிவராசசிங்கம் [யயது 4] சுதுமலை. லதா [வயது 10] மானிப்பாய். [கு]

## மக்கள் வெளியேறிய

# வீடுகளில் இருந்து

## பொருட்கள் கொள்ளை!

[அச்சுவேலி நிருபர்]

இராணுவ தாக்குதல்களுக்கு பயந்து மக்கள் வெளியேறிய வீடுகளில் இருந்து பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பத்தமேனி இடைக்காடு வளலாய் பகுதியில் பருமளவு மக்கள் பாதுகாப்புகருதி இடம் பெயர்ந்திருப்பதால் அவர்கள் விட்டுச்சென்ற பொருட்கள் கொள்ளையடிக்கப் படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்கொள்ளையர்கள் ஆகாயத்தாக்குதல் இராணுவவெளியேறல் பற்றி சிலவதந்திகளை பரப்பி மக்களைக் குழப்பிவிட்டு தமது கைவரிசையை காட்டி வருகின்றனராம். [சி]

## மினிபஸ் சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், செவ்

சுண்டிக்குளியிலிருந்துகச்சேரியூடாக நல்லூர் வரையான உள்ளூர் மினிபஸ்சேவை யாழ் மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானத்தினுல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

சுண்டிக்குளியிலிருந்து புறப்படும் மினிபஸ், கச்சேரி நல்லூர் வீதிவழியாக நல்லூர் வந்துதிரும்பவும் அதேவழியாக சுண்டிக்குளி சென்றடையும் இச்சேவை அரை மணித்தியாலத்திற்கொருமுறை நடைபெறும்.

பாடசாலை மாணவர்கள் அலுவலக ஊழியர்கள்,பொதுமக்கள் ஆகியோரின் நலன் கருதி இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## ஆவளாயில் கண்ணிவெடி

யாழ்ப்பாணம், செவ்

காங்கேசன்துறையிலிருந்து நேற்று அதிகாலை பலாலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த ராணுவத்தினர்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் ராணுவத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்த பத்திரிகை அறிக்கையொன்றில், ''நேற்று அதிகாலை 5 மணியளவில் ஆவளாய்ச் சந்தியில் நடைபெற்ற இத்தாக்குதலின் பின்னர் சம்பவம் நடந்த இடத்திலிருந்து சிதறுண்ட உடற்பாகங்களும் 4 தலைக்கவசங்கள் உட்பட சிதறுண்ட நிலையிலிருந்த ஆயுதங்களும் புலிகளால கைப்பற்றப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறந்தோர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சுதுமலை தாக்குதல்களில் இறந்தவர்கள் விபரம்.

தீபன் பத்மநாதன 7வயது] சுதுமலை வெற்றிவேலு சண்முகநாதன் 0 வயது இவரது மகன் ச. சிவகுமார் (13 வயது) காரைநகர் பெருமாள் சுப்பையா [50 வயது) [இந்தியப்பிரஜை கடலை வியாபாரி யாழ்ப்பாணம், பெண் கடலை வியாபாரி தம்பு மகாலிங்கம் [32 வயது) யாழ்ப்பாணம். (ஒ]

## இரத்ததானம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் போதனு வைத்தியசாலையல் ஏற்பட்ட இரத்தபற்ருக் குறையை அறிந்த யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி 'இன்ரறக்ட்' கழகத்தினர் வைத்தியசாலைக்குச் சென்று இரத்ததானம் செய்தனர்.

இந்த இரத்ததான வைபவத்தை கல்லூரி உப அதிபர் தமது இரத்தம் வழங்கி ஆரம்பித்துவைத்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B /81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu. Telephone: — 22389 24126